அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 25/2001

எனது இலஆ/111/2/3/3
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள்,உள்ளூராட்சி
தென்பகுதி அபிவிருத்தி அமைச்சு
சுதந்திர சதுக்கம், கொழும்பு.07
2001.10.18

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்

**2001 பாராளுமன்ற தேர்தலை நடாத்தவதற்காக**
**வேண்டிய பணிற்றொகுதி**

2001 டிசம்பர் மாதம் 05 ஆந் திகதி நடைபெறவிருக்கின்ற பாராளுமன்றத் தேர்தலின் போது தேர்தல் ஆணையாளருக்கும் கடமை பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கும் மாகாண அரச சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களினதும் உதவி இன்றியமையாதது.தேர்தல் கடமைகளுக்காக இனம் காணப்படும் உத்தியோகத்தர்கள் மட்டுமல்லாமல் ஏனைய அனைத்து உத்தியயோகத்தர்களும் தேவைப்படும் போது சேவையில் ஈடுபடுத்துவதற்காக தயாராக இருக்க வேண்டும்.

02. ஆகையால் பின்வரும் வழிமுறைகளை கையாள வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது.

(அ) 2001.11.20 இருந்து 2001.12.10 ஆந் திகதி வரையிலான (இரண்டு நாட்களும் அடங்கலாக) காலத்திற்குள் அரச சேவையை அல்லது மாகாண அரச சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை அனுமதிக்கப்படலாகாது என்பதுடன் இக் காலத்திற்காக தற்போது விடுமுறை அனுமதிக்கப்பட்டிருந்தால் அவ் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டதாக கருத வேண்டும் உத்தியோகத்தர் ஒருவரின் சுகவீனம் போன்ற மிக விசேடமான ஒரு விடயம் சம்பந்தமாக விடுமுறை வழங்கும் போது தனிப்பட்ட முறையில் தொடர்புடைய அமைச்சின் செயலாளர் அல்லது மாகாணசபை தலைமை செயலாளர் அதை தீர்மானிக்க வேண்டும்

(ஆ) வெளிநாட்டு தூதுக் குழுக்களுடன் அலுவலக பேச்சுவார்த்தை நடாத்துதல், மாநாடுகள்,கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை ஏற்பாடு செய்யும் போது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் அலுவலர்களை தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு தடை ஏற்பாடாதவாறு அவற்றை ஏற்பாடு செய்வதற்கு சகல அமைச்சுக்களும் மாகாண சபைகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ) ஏதேனும் மிகமுக்கியமான தனிப்பட்ட தேவைக்காக ஒரு நாள் அல்லது இரு நாட்கள் அளவு குறுகிய காலத்திற்கு விடுமுறை தேவைப்படுமாயின் தேர்தல் நியமனக் கடிதங்களை பொறுப்பேற்பதற்கு, தபாலில் வாக்களிப்பதற்கு ஆலோசனை வகுப்புகளில் கலந்து கொள்வதில் தடையேற்படாதவாறு திணைக்களத் தலைவரின் தற்றுணிவின்படி விடுமுறை அனுமதிக்கலாம்.

03. தேர்தல் ஆணையாளருடன் கலந்தாலோசித்த பின் இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

04. மேற்படி நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ள வேண்டும் என்பதுடன் இவ் ஏற்பாடுகளை தங்களின் அமைச்சில் /நிறுவனத்தில் உள்ள சகல அலுவலர்களுக்கும் அறிவிக்க வேண்டுமென்பதையும் தயவாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்: எம்.என்.ஜுனைட
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள், உள்ளூராட்சி
தென்பகுதி அபிவிருத்தி அமைச்சு